**சீனா அபிவிருத்தி வங்கி நிதியளித்தல் முன்னுரிமை வீதி செயற்திட்டம் 3 – (கட்டம் I) - 2015**

---

சீனா அபிவிருத்தி வங்கி நிதியளித்தல் முன்னுரிமை வீதி செயற்திட்டம் 3 – (கட்டம் I) இன் 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இச் செயற்திட்டமானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சீன அபிவிருத்தி வங்கி கூட்டுத்தாபனத்திற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2014 மார்ச் 11 ஆந் திகதிய 4510201401100000245 ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கை மற்றும் 2014 நவம்பர் 24 ஆந் திகதிய 4510201401100000587 ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கை என்பவற்றின் கீழ் அமுல்படுத்தப்படுகின்றது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. முன்னுரிமை அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட வீதிப் பகுதிகளை புனரமைப்பதன் ஊடாக நாட்டின் தேசிய நெடுஞ்சாலை வலைப்பின்னலை மேம்படுத்துவதன் மூலம் அத்தியாவசிய சேவைகளிற்கு நுழைதல் வசதிகளை வழங்கி பொருளாதார அபிவிருத்தி செயற்பாடுகளிற்குப் பங்களிப்புச் செய்வதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 46,184.54 மில்லியனுக்குச் சமமான யூஎஸ்டொ. 357.69 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 38,736 மில்லியனிற்குச் சமமான யூஎஸ்டொ. 300 மில்லியனை நிதியளிப்புச் செய்வதற்கு சீன அபிவிருத்தி வங்கி கூட்டுத்தாபனம் இணங்கியிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2014 செப்தெம்பர் 09 ஆந் திகதி தொடங்கியிருந்ததுடன் 2017 ஏப்ரல் 24 ஆந் திகதியளவில் முடிவுறுத்துவதற்கு பட்டியலிடப்பட்டது.

**1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு

செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட அத்தகைய செவ்வைகளையும் அப் பரிசோதனை உள்ளடக்கியிருந்தது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாடு மற்றும் செயற்திட்ட செயற்படுத்துகைகள் தொடர்பிலான ஏடுகள், பதிவேடுகள் போன்றவற்றின் நம்பகத்தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டு நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தினால் பேணப்பட்ட முன்னேற்ற நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் உதவி வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடனிலிருந்துமேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த விதந்துரைப்புக்களின் பிரகாரம் கடனின் கீழான மீளப்பெறுகைகள் காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் செயற்திட்ட நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்ட அமுலாக்கலிற்காக பின்பற்றப்பட்ட வகைப்படுத்தல்களிற்கு இணங்கும் வகையில் செலவினங்கள் சரியாக இனங்கண்டு கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் வசதி உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும், ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து இதுவரை தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதிகள் ஏற்பாடு செய்யப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காகவே அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் வசதி உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த நிதி கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்ராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள வேலை ஆரம்பித்தல் முற்பணங்கள் மற்றும் சிவில் நிர்மாணங்கள் மீதான கடன்கொடுத்தோர் என்பன தவறான கணக்கீட்டுப் பரிகாரம் காரணமாக முறையே ரூபா 826.27 மில்லியன் மற்றும் ரூபா 320.96 மில்லியன் தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) மேலும், சிவில் வேலைகளின் பெறுமதியும் பிடி காசும் தவறான கணக்கீட்டுப் பரிகாரம் காரணமாக முறையே ரூபா 601.72 மில்லியன் மற்றும் ரூபா 96.41 மில்லியன் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியங்களின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டிலும் 2015 திசெம்பர் 31 வரையிலுமான நிதிகளின் பயன்பாடு என்பற்றுடன் தொடர்புடைய சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கை யில் நிதியளிப்பதற்காக இணங்கப்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற் கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | யூஎஸ்எஸ் மில். | ரூபா மில். | ரூபா மில். | யூஎஸ்எஸ் மில். | ரூபா மில். | யூஎஸ்எஸ் மில். | ரூபா மில். |
| சீன அபிவிருத்தி வங்கி கூட்டுத்தாபனம் | 300.00 | 38,736.00 | 17,274.00 | 127.40 | 17,273.30 | 149.36 | 20,132.05 |
| ஜீஓஎஸ்எல் | 57.69 | 7,448.54 | 2,877.60 | 21.22 | 2,877.60 | 25.73 | 3,469.13 |
| மொத்தம் | **357.69** | **46,184.54** | **20,151.60** | **148.62** | **20,150.90** | **175.09** | **23,601.18** |

### 3.2 பௌதீக செயலாற்றல்

செயற்திட்ட அமுலாக்கல் திட்டத்தின் பிரகாரம், 12 தேசிய வீதிப் பகுதிகளின் 248.34 கிலோமீற்றர்களை செயற்திட்டக் காலத்தில் புனரமைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அவற்றில், மீகஹஜன்துர – குமாரகம வீதியின் 8.80 கிலோமீற்றரின் புனரமைத்தல் வேலைகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூரணப்படுத்தப்பட்டிருந்தன. இருப்பினும், கண்டி – யாழ்ப்பாண வீதியின் 1+65 கிலோமீற்றர் முதல் 3+90 கிலோமீற்றர் வரையிலான பகுதியினதும் மாவனெல்ல-ஹெம்மாதகம-கம்பொல வீதியின் 0+00 கிலோமீற்றர் முதல் 20+00 கிலோமீற்றர் வரையிலான பகுதியினதும் புனரமைத்தல் வேலைகள் அவ் வேலைகளை ஆரம்பிப்பதில் காணப்பட்ட தாமதம் மற்றும் காணிகளை கையேற்றல் மீதான தீர்க்கப்படாத பிரச்சினைகள் காரணமாக மெதுவான செயன்முன்னேற்றத்தை காண்பித்திருந்தன. 09 தேசிய வீதிகளின் 211.29 கிலோமீற்றர் பகுதிகளின் புனரமைப்பு வேலைகளினது பௌதீக செயன்முன்னேற்றம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 38 சதவீதம் முதல் 89 சதவீதம் வரையிலான வீச்சல் பல்வேறு கட்டங்களை காண்பித்திருந்தன.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொதுவான பண்பொன்றாக, வீதிகளின் புனரமைத்தல் வேலைகளினது நோக்கெல்லையானது அவ்வப்போது மாற்றத்திற்கு உட்பட்டிருந்தது. அதன் விளைவாக, மூல மதிப்பீட்டுக் கிரயம் அதிகரிப்பதற்கான சாத்தியம் மற்றும் வேலைகளை பூரணப்படுத்துவதற்கு காலநீடிப்புக்களை செய்யவேண்டியுள்ளமை போன்ற ஆபத்துக்களை கணக்காய்வில் புறக்கணிக்க முடியவில்லை. அத்துடன், ஆரம்ப கட்டங்களில் உரிய நில அளவைகள் மேற்கொள்ளப்பட்டிருந்திருப்பின் அவ்வாறான பிரச்சினைகளை குறைத்திருக்க முடியும். அவதானிக்கப்பட்ட நிலமைகள் கீழே தரப்பட்டுள்ளன.

(i) தம்பொக்க – கடுபிடிய வீதியின் 9.81 கிலோமீற்றர் வேலைகளின் மூல நோக்கெல்லை மாற்றப்பட்டு வீதியின் 12.5 மீற்றர் அகலமானது 1.70 மீற்றரால் குறைக்கப்பட்டிருந்தது. இருப்பினும், ரூபா 1.62 மில்லியன் கிரயத்தில் கையேற்கப்பட்டிருந்த மேலதிகக் காணியில் எல்லை அடையாளங்கள் இடப்பட்டிருக்காமையால் வெளித்தரப்பினரால் காணி கைப்பற்றப்படுவதற்கான சாத்தியம் காணப்படுகின்றது. குறித்த வீதியின் 20 மாதிரிகளின் மீதான அஸ்பல்ட் கொங்ரீட் பரீசோதனை அறிக்கையின் படி, 06 மாதிரிகளின் காற்று உட்புகுதல்

விகிதமும் அஸ்பல்ட் அடர்த்தியும் தொழில்நுட்ப நியமங்களுடன் இணங்கியிருக்கவில்லை.

(ii) வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடம் கடந்த பின்னர் வேயங்கொட – ருவன்வெல்ல வீதியின் 12+400 கிலோமீற்றர் முதல் 17+750 கிலோமீற்றர் வரையிலான பகுதியின் புனரமைத்தல் வேலைகளின் நோக்கெல்லை மாற்றப்பட்டு 18 மதகுகள், 05 பக்கவாட்டுச் சுவர்களை நிர்மாணித்தல் மற்றும் ஏனைய 04 பாலங்களை நிர்மாணித்தல் போன்ற மேலதிக வேலைகள் உள்ளடக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) மாரவில - உடுபத்தாவ வீதியின் புனரமைத்தல் வேலைகளின் அளவுச் சிட்டையானது விபரமான பொறியியல் புலனாய்வுகளை மேற்கொள்ளாது ஒரு வகையான வரைபுகளின் அடிப்படையில் மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் விளைவாக, வன் பக்கவாட்டு அகலத்தின் 0.5 மீற்றர் குறைக்கப்பட்டிருந்தது. அத்துடன், வீதி அபிவிருத்தி அதிகாரசபையினதும் வரிசை அமைச்சினதும் ஏனைய நோக்கங்களிற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 6.48 மில்லியன் கூட்டுத்தொகையான செலவினம் இந்த வீதியின் புனரமைத்தல் வேலைகளாக கருதப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) கிரியல்ல – நேதுரன – எஹலியாகொட வீதியில் 2015 ஒக்தோபர் இல் கணக்காய்வாளரால் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையில் ஒப்பந்த நிர்வாகம் தொடர்பில் வெளிப்பட்டிருந்த பல்வேறு குறைபாடுகள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

(i) கிரியல்ல – நேதுரன – எஹலியாகொட வீதியினை புனரமைப்பதற்காக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மின்சாரம் மற்றும் நீர் வழங்கல் சேவைகளை அகற்றும் வேலைகள் வடிவமைத்தல் கட்டத்தில் மதிப்பிடப்பட்டு மூல மதிப்பீடுகளில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக முறையே ரூபா 35.34 மில்லியன் மற்றும் ரூபா 21.39 மில்லியன் பெறுமதியான மேலதிக வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ii) ஒப்பந்த உடன்படிக்கையிலுள்ள தொழில்நுட்ப விதந்துரைப்புக்களின் 113 ஆம் பிரிவின் பிரகாரம், வீதி புனரமைத்தல் வேலைகள் காரணமாக பாதிக்கப்பட்ட தரப்பினர்களிற்கு இழப்பீட்டினைச் செலுத்துவதற்காக நடவடிக்கையினை மேற்கொண்டு அதற்காக ஏற்பட்ட கிரயத்தினை மேந்தலை மற்றும் இலாபத்திற்கான 30 சதவீத எல்லையுடன் செயற்திட்டத்திலிருந்து மீளப்பெறுதல் வேண்டும். இழப்பீட்டினைச் செலுத்துவதற்காக நிதியினை முதலீடு செய்வதற்குப் பதிலாக செயற்திட்டத்தினால் வழங்கப்பட்ட காசோலைகளை பகிர்ந்தளிப்பதில் மாத்திரம் ஒப்பந்ததாரர் ஈடுபட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இருப்பினும், அளவுத்திட்ட சிட்டையில் ரூபா 1.0 மில்லியன் மாத்திரம் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மேந்தலைகள் மற்றும் இலாப எல்லையாக மீளாய்வாண்டில் ஒப்பந்த தாரரால் ரூபா 2.15 மில்லியன் தொகை அறவிடப்பட்டிருந்தது.

(iii) சுற்றாடல் பாதுகாப்பு நோக்கத்திற்காக ஒப்பந்த ஆவணத்திலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக ஒப்பந்ததாரர் வீதியின் ஓரத்திலுள்ள 09+875 கிலோமீற்றர் முதல் 09+990 கிலோமீற்றர் வரையிலான தாழ் நிலப்பகுதிகளில் கழிவுகளை அகற்றியிருந்தமையால் இயற்கை நீரோடைகள் தடைப்பட்டிருந்தன. அத்துடன், வீதி சமிக்கைகள், சுட்டிக்காட்டும் பலகைகள் மற்றும் வீதி ஓசைகள் போன்ற பாதுகாப்பு மற்றும் வீதிக் கட்டுப்பாட்டு நோக்க கருவிகள் ஒப்பந்த தாரரால் வீதி புனரமைத்தல் வேலைகளின் போது பயன்படுத்தப்படாதிருந்தமை களப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது.

(இ) ஹினிதும-ஓபாத-பிடபெத்தர வீதியின் புனரமைத்தலிற்காக 2015 ஆகஸ்ட் 12 ஆந் திகதி முதல் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை மதியுரைஞரால் பொருள் பொறியியலாளர் ஒருவர் ஈடுபடுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் காரணமாக, தர உத்தரவாத நோக்கத்திற்காக இணங்கப்பட்ட அளவீடுகள் மதியுரைஞரால் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மதியுரைஞரால் பேணப்பட்ட பதிவேடுகளின் பிரகாரம், தளப்பரப்பு செப்பனடைவதற்கு முன்னர் வாகனங்கள் பயணிப்பதற்கு வீதி அனுமதிக்கப்பட்டமை மற்றும் நலிவான தாரிடல் பரிகாரம் காரணமாக 0+00 கிலோமீற்றர் முதல் 27+500 கிலோமீற்றர் வரையிலான இரத்தினபுரி-வேவல்வத்த வீதியின் புனரமைத்தல் வேலைகள் தொழில்நுட்ப நியமங்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. தொழில்நுட்ப நியமங்களை பின்பற்றி மேற்படி குறைபாடுகளை திருத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் வீதி முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறும் அநேக சந்தர்ப்பங்களில் ஒப்பந்ததாரர் அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும், அவை தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. வடிவமைத்தல் கட்டத்தில் வீதி நல அளவையினை செயற்திட்டம் மேற்கொண்டிருக்காமை அவதானிக்கப்பட்டதுடன், அதன் விளைவாக, 03 கிலோமீற்றரால் வீதி வேலைகளின் நோக்கெல்லை குறைக்கப்பட்டிருந்தது.

(உ) காணியினை கையேற்பதில் காணப்பட்ட சிக்கல்கள் காரணமாக கண்டி – யாழ்ப்பாண வீதியின் புனரமைத்தல் வேலைகள் தாமதத்துடன் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அத்துடன், குறித்த வீதியின் 1.65 கிலோமீற்றர் முதல் 3.90 கிலோமீற்றர் வரையிலான புனரமைத்தல் வேலைகளிற்குரிய வேலை ஆரம்பித்தல் முற்பணங்கள் ஏற்பாட்டுத் தொகைக்கான ஒதுக்கீடுகள் காரணமாக ரூபா 252.82 மில்லியனால் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன், அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்களின் 5.4.4(i) ஆம் பந்திக்கு முரணாக நிகழத்தக்கவைகளும் ஒப்பந்த மதிப்பீட்டுக் கிரயத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2007 நவம்பர் மாதத்தில் வெளியிடப்பட்ட தேசிய கொள்வனவு முகவராண்மையின் மதியுரைச் சேவைகள் கையேட்டின் 1.2.1 ஆம் பிரிவின் பிரகாரம், சிவில் வேலைகளிற்கான மதியுரைஞர்களை தெரிவு செய்வதற்காக போட்டி கூறுவிலை நடைமுறை பின்பற்றப்படுதல் வேண்டும். இருப்பினும், முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் -2 என்றழைக்கப்படும் ஏனைய செயற்திட்டங்களிற்காக தெரிவுசெய்யப்பட்ட 02 மதியுரைஞர்கள் போட்டிமிக்க கூறுவிலை செயன்முறை பிரயோகிக்கப்படாது இச் செயற்திட்டத்தின் மதியுரைஞர்களாக வேலையாற்றியிருந்தனர். அத்துடன், மதியுரைஞர்களிற்கான கொடுப்பனவுகள் மேற்குறிப்பிட்ட செயற்திட்டங்களுடன் கைச்சாத்திடப்பட்டிருந்த மூல உடன்படிக்கைகளின் முரண்களாக கருதப்பட்டிருந்ததுடன், அதன் விளைவாக, செயற்திட்டத்தின் மதியுரைக் கட்டணங்கள் ரூபா 95.58 மில்லியனால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

### 3.4 பயனற்ற கொடுக்கல் வாங்கல்

ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை தீர்ப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக ஹினிதும - ஓபாத – பிடபெத்தர வீதியின் புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தலில் ஈடுபட்டுள்ள ஒப்பந்ததாரருக்கு ரூபா 24.68 மில்லியன் தொகை செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

## 3.5 மனித வள முகாமைத்துவம்

செயற்திட்டச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு 03 ஆண்டுகள் கடந்த பின்னரும் செயற்திட்டக் கண்காணிப்புப் பிரிவின் 03 பிரதி செயற்திட்டப் பணிப்பாளர் மற்றும் ஒரு சிரேஷ்ட பொறியியலாளர் பதவிகளிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு அர்த்தமுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படாமை அவதானிக்கப்பட்டது. அத்துடன், செயற்திட்டத்திற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த பொருள் பொறியியலாளர்களின் 06 பதவிகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 பொருள் பொறியியலாளர்கள் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். செயற்திட்டத்தின் முக்கியமான பதவிகள் தொடர்ந்தும் வெற்றிடமாக் காணப்பட்டமை செயற்திட்டத்தின் சீரான செயற்பாடுகளை மோசமாக பாதித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. இருப்பினும், ஏனைய 02 மதியுரைஞர்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி ஆட்சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டில் ரூபா 1.09 மில்லியன் கூட்டுத்தொகையான படிகள் செலுத்தப்பட்டிருந்தன.